## புனித அந்தோணியார் ஆலயம், சத்தியமூர்த்தி நகர், சென்னை - 39
## ஞாயிறு அறிவிப்புக்கள் - 28.5.2017

01. இன்று நம் ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழாவினை கொண்டாடுகின்றோம். அடுத்த ஞாயிற்றுக்கிழமை அதாவது ஜுன் 4-ம் நாள், பரிசுத்த ஆவியாரின் வருகையின் பெருவிழாவினை சிறப்பிக்கவுள்ளோம். அதற்கு தயாரிப்பாக இந்நாட்களில் நடந்த கொண்டிருக்கின்ற நவநாட்களில் இறைமக்கள் தவறாமல் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம். இன்றைய திருப்பலி முடிந்தவுடன் இளையோர் கூட்டமும், மறைக்கல்வி வகுப்புகளும் வழக்கம்போல் நடைபெறும்.

02. வருகிற வாரத்தில் பங்கு தந்தையின் தலைமையில் நடைபெறவுள்ள அன்பியக் கூட்டங்கள்:

1.6.2017 - வியாழன் - புனித சின்னப்பர் மற்றும் செபமாலை மாத அன்பியக் கூட்டங்கள்

03. வார திருநாட்கள் விவரம்:

30/5, செவ்வாய் - புனித அந்தோணியாரின் வார நாள்
31/5, புதன் - கன்னி மரியம்மாள் எலிசபெத்தம்மாவை சந்தித்த விழா மற்றும் தொன்போஸ்கோவின் மாதாந்திர நினைவு
01/6, வியாழன் - வேதசாட்சியான புனித ஜஸ்டீன் நினைவு
02/6, வெள்ளி - வேதசாட்சிகளான புனித மார்சிலெனஸ் மற்றும் புனித பீட்டர் நினைவு
03/6, சனி - வேதசாட்சிகளான புனித சார்லஸ் லுவாங்கா மற்றும் தோழர்கள் நினைவு மற்றும் சகாயத்தாயின் நவநாள் தினம்.

04. அனுதினமும் மாலை நேரத்தில் நடைபெறும் தேவதாயின் வணக்க மாத திருநிகழ்வுகளில் அனைவரும் அன்போடு கலந்துகொண்டு தேவதாயை சிறப்பிப்பது மிக மகிழ்ச்சியளிக்கின்றது. இம்மாதத்தின் மணிமகுடமாக நடக்கவிருப்பது தேவதாயின் முடிசூட்டு விழாவாகும். மே மாதம் 31-ம் தேதி, புதன் கிழமை மாலை 6.00 மணிக்கு அன்னையின் சிறப்பான தேர்பவனியானது லூக்காஸ் அன்பிய வீதிகளின் வழியாக சென்று நம் பங்கு ஆலயத்தை வந்டையும். அதன் பிறகு அன்னைக்கு முடிசூட்டு நிகழ்வும், அதனைத் தொடர்ந்து ஆடம்பர திருப்பலியும் நடைபெறும். பவனியானது எரியும் மெழுகுதிரிகளுடன் நடைபெறவுள்ளதால் அனைவரும் உங்களிடம் உள்ள மெழுகுதிரி கூண்டுகளை அன்று கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கின்றோம். பவனியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் சிறிய நீலநிற கொடிகள் ஆலயத்தில் வழங்கப்படும். அன்னையின் முடிசூட்டு நிகழ்ச்சிக்கு முன் அனைத்து அன்பியங்களும் தேவதாய்க்கு வரிசைத்தட்டுகளை கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

05. ஜுன் மாதம் 1-ம் தேதி, வருகிற வியாழன் கிழமையன்று நாம் புதிய மாதந்தை துவங்குகின்றோம். கடந்த மாதத்திற்காக நன்றி கூறிடவும், ,வருகிற மாதத்தில் இறைவனின் வழித்துணையினை பெற்றிடவும் மாதத்தின் முதல் நாளில் நடைபெறும் அதிகாலை செபத்தில் (காலை 5.00 மணிக்கு) அனைவரும் பங்குபெற அன்போடு அழைக்கின்றோம்.

06. ஜுன் மாதம் 2-ம் தேதி மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை. அன்று காலைத் திருப்பலிக்குப் பின் நோயாளிகளுக்கு திவ்விய நன்மை வழங்கப்படும். மாலை 6.15 மணிக்கு செபமாலையும், திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும், அதனைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.

07. ஜுன் மாதம் 3-ம் தேதி, மாதத்தின் முதல் சனிக்கிழமை. அன்று காலைத் திருப்பலி வழக்கம் போல் நடைபெறும். மாலை 6.15 மணிக்கு செபமாலை, அன்னையின் தேர்ப்பவனி, திருப்பலி ஆகியவை நடைபெறும்.

08. ஜுன் மாதம் 3,4,,10 ஆகிய தேதிகளில் சாந்தோம் மேய்ப்புப்பணி மையத்தில் திருமண தயாரிப்பு வகுப்புகள் நடைபெறவுள்ளன. இளைஞர்கள், இளம்பெண்கள் அதில் பங்குபெற்று தங்களையே தயாரித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

09. ஜுன் மாதம் 4-ம் தேதி, நம் பங்கில் திருமுழுக்கு அருட்சாதனம் வழங்கப்படும். அதைப் பெற விரும்புவோர் அதற்குரிய தயாரிப்பு வகுப்புகளுக்கு வருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

10. ஜுன் மாதம் இருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம். எனவே குடும்பங்களில் திருஇருதய ஆண்டவர் படத்தை ஸ்தாபகம் செய்ய விரும்புவோர் மற்றும் புதுப்பிக்க விரும்புவோர் பங்கு தந்தையை அன்பியத் தலைவரோடு வந்து முன்னதாகவே சந்தித்து ஏற்பாடு செய்திடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

11. நம் பங்கின் ஆண்டு விழா மற்றும் குடும்ப விழாவான நம் புனித அந்தோணியாரின் ஆண்டு விழாவானது ஜூன் மாதம் 9--ம் நாள், வெள்ளிக்கிழமை கொடியேற்றுத்துடன் துவங்கி 18-ம் நாள், ஞாயிற்றுக்கிழமையன்று திருவிழா திருப்பலி மற்றும் புதுநன்மை வழங்கல் நிகழ்வோடு நிறைவடையும். புனிதரின் கொடி பவனியானது M.K.B.நகர் பாரி குடியிருப்பிலுள்ள அன்னையின் கெபியில் துவங்கி பவனியாக ஆலயம் வந்தடையும். அனைத்து பங்கு மக்களும் முழு ஒத்துழைப்புக் கொடுத்து ஆண்டுவிழாவினை ஒரு அருள்மிகு குடும்ப விழாவாக அமைத்திட உங்களை வேண்டுகின்றோம். திருவிழா நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட பல்வேறு குழுக்களை பங்குத்தந்தை அமைத்துள்ளார். நவநாட்களில் குறிக்கப்பட்ட அன்பியங்கள் ஒன்று சேர்ந்து பீட அலங்காரம், இடத்தயாரிப்பு திருவழிபாடு ஆகியவற்றை செய்து அந்நாளை ஒரு அருள் அனுபவமாக மாற்றிட கேட்டுக் கொள்கின்றோம்.

12. பங்கு திருவிழாவிற்கு குறைந்தபட்ச குடும்பத் தொகையாக ரூபாய் 150, நவநாட்களில் ஒரு நாள் உபயமாக ரூபாய் 1000, திருப்பலி கருத்துக்காக ரூபாய் 100 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் கோவிலுக்குத் தேவையான காணிக்கைப் பொருட்களை தனிக்குடும்பமாகவோ அல்லது பலகுடும்பங்களாக இணைந்து கொடுக்க விரும்புவோர், திருவிழாவிற்காக நன்கொடை கொடுக்க விரும்புபவர்கள், தேர் அலங்காரம், மின்விளக்குகள், ஜெனரேட்டர், உணவு ஆகிய செலவினங்களை ஏற்றுக்கொள்ள விரும்புவோர் பங்கு தந்தையை அணுகுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

13. இவ்வருடம் 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நம் பங்கின் பிள்ளைகளை பங்கின் ஆண்டு விழாவின் போது வாழ்த்தி பரிசளிக்க விரும்புகின்றோம். எனவே 10-ம் வகுப்பில் 400-க்கு மேல், 12-ம் வகுப்பில் 1000-க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் மதிப்பெண் நகலை பங்கு அலுவலகத்தில் ஜூன் மாதம் 5-ம் தேதிக்குள் கொடுத்திடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

14. திருமண அறிவிப்புகள்:
    1. நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, MKB நகரில் வசிக்கும் பெற்றோர் ஜோசப் பிரான்சிஸ் - வியாகுல மேரி அவர்களின் மகன் தாமஸ் ஆலனுக்கும், நமது உயர் மறைமாவட்டம், புனித சூசையப்பர் பங்கு, திருவள்ளுவர் நகரில் வசிக்கும் பெற்றோர் செல்வராஜ் - சகாயமேரி அவர்களின் மகள் டெனிஸ் இன்பெண்டீனாவுக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாவது ஓலை.
    2. நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, MKB நகரில் வசிக்கும் பெற்றோர் அகஸ்டீன் - லூர்து மேரி அவர்களின் மகன் விஜய் அற்புதராஜ் ரெனால்டுக்கும், நமது உயர் மறைமாவட்டம், புனித சகாய அன்னை பங்கு, நம்மாழ்வார்பேட்டையில் வசிக்கும் பெற்றோர் பிரான்கிளின் - பாத்திமா அவர்களின் மகள் ஆக்னல் சான்ட்ராவுக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாவது ஓலை.
    3. செங்கல்பட்டு மறைமாவட்டம், புனித சுவக்கீன்,அன்னாள் பங்கு, வேட்டுவாங்கன்னியில் வசிக்கும் பெற்றோர் குமார் - தங்கமணி அவர்களின் மகன் நரேஷ் குமாருக்கும், நமது உயர் மறைமாவட்டம், நமது பங்கு, MKB நகரில் வசிக்கும் பெற்றோர் காணிக்கை ராஜ் - பாலம்மாள் அவர்களின் மகள் ஆரோக்கிய மேரிக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாவது ஓலை.
    4. நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, MKB நகரில் வசிக்கும் பெற்றோர் சுரேந்திரன் - வசந்தா அவர்களின் மகன் சாந்தா ராமுக்கும், செங்கல்பட்டு மறைமாவட்டம், புனித குழந்தை இயேசு பங்கு, செம்மஞ்சேரியில் வசிக்கும் பெற்றோர் ஜான் - பிரபாவதி அவர்களின் மகள் ஜான்சி ராணிக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது ஓலை.

    இம்மணமக்களுக்காக செபிப்பதும், இத்திருமணங்களில் ஏதேனும் விக்கினமிருந்தால் பங்குத் தந்தைக்கு தெரிவிப்பதும் நம் அனைவரின் கடமையாகும்.